ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2128/30 - 2019 ජූනි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.06.20
2128/30 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 10/1973* (III).

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*மதுவரி அறிவித்தல் இல. 04/2019*

**ஒட்டுத்துண்டு, ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமை**

*(52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவுடனும் 30 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

*மங்கள சமரவீர,*
*நிதி அமைச்சர்.*

*கொழும்பு 01,*
*2019, யூன் 20.*

விதிகள்

*1.* இவ்விதிகள், *2019* ஆம் ஆண்டின் மதுவரி (பாதுகாப்பு சிறப்புக்கூறுகள்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட (இதனகத்துப்பின்னர் ''ஒட்டுத்துண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) பூல்புரூப் ஒட்டுத்துண்டானது, (இதனகத்துப் பின்னர் ''கட்டளைச் சட்டம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 (ஒ) என்னும் பிரிவின் நோக்கத்துக்காக இவ்விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட பாதுகாப்பு சிறப்புக்கூறின் வகையாக இருத்தல் வேண்டும்.

3. அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்று ஒட்டுத்துண்டு ஒட்டப்பட்டுள்ளதாக இருந்தாலொழிய, இறக்குமதியாளரெவரும் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரெவரும் அத்தகைய மதுவரியிடத்தகு பொருளை உடைமையில் வைத்திருத்தல், இடம்பெயர்த்தல், களஞ்சியப்படுத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகாது.

ஆயின் எவ்வாறாயினும், இவ்விதிகள் வலுவுக்குவரும் திகதியிலுள்ள II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றின் இறக்குமதியாளரொருவர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர், இவ்விதிகள் வலுவுக்குவரும் திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களில் ஒட்டுத்துண்டொன்றை ஒட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் :

ஆயின் மேலும், இவ்விதிகள் வலுவுக்குவரும் திகதியில் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் இருப்பைக்கொண்டுள்ள வியாபாரியொருவர், இவ்விதிகள் வலுவுக்குவரும் திகதியிலிருந்து அறுபது (60) நாட்களுக்குள் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய மதுவரியிடத்தகு பொருட்களில் ஒட்டுத்துண்டொன்றை ஒட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும்.

4. (இதனகத்துப் பின்னர் "ஆணையாளர் தலைமையதிபதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி, பின்வரும் நோக்கங்களுக்காக, ஒட்டுத்துண்டினதும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமையினதும் நடைமுறைப்படுத்துகை, முகாமைத்துவம், வழங்குகை, கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றுக்குப் பொறுப்புடையவராதல் வேண்டும் :-

(அ) வரி அல்லது தீர்வை செலுத்தப்படாத மதுபானத்தின் கிடைக்கக்கூடிய தன்மையைத் தடுத்தல் ;

(ஆ) மதுவரி அரசிறையின் பாதுகாப்பை அதிகரித்தல் ; அத்துடன்

(இ) போலியான தயாரிப்புக்களைத் தடுத்தல்.

5. (1) இறக்குமதியாளரொருவர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர் ஒட்டுத்துண்டுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, கைமுறையாக அல்லது இலத்திரனியல் முறையாக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

(2) விண்ணப்பமானது, இறக்குமதிகளுடன் தொடர்புடைய அத்தகைய ஆவணங்களையும் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படக்கூடியவாறான அத்தகைய ஆவணங்களையும் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(3) இறக்குமதியாளரொருவர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர், அடுத்துப்பின்னரான ஒவ்வொரு மாதங்களும் தொடங்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர், அத்தகைய இறக்குமதியாளரினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரினால் பயன்படுத்தப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஒட்டுத்துண்டுகளின் தொகைபற்றி ஆகக்குறைந்தது அறுபது நாட்களைக்கொண்ட முற்கணிப்பொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) (அ) அத்தகைய இறக்குமதியாளர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர் -

(i) இவ்விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய மதுவரியிடத்தகு பொருள் தொடர்பில் மதுவரித் தீர்வையைச் செலுத்தியிராதிருப்பின்;

(ii) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய மதுவரியிடத்தகு பொருளினது வணிகக்குறியீட்டின் சுட்டுத்துண்டுக்கான அல்லது பொதிக்கான அங்கீகாரத்தை பெற்றிராதிருப்பின் ;

(iii) இவ்விதிகளுடன் இணங்கியொழுகாதிருப்பின் ; அத்துடன்

(iv) கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாதிருப்பின்,

ஆணையாளர் தலைமையதிபதி, இவ்விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றின் மீது ஒட்டப்படவேண்டிய ஒட்டுத்துண்டுகளுக்கான விண்ணப்பமொன்றை மறுக்கலாம்.

(ஆ) பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட விண்ணப்பமானது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளவிடத்து, ஒட்டுத்துண்டுகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக, இறக்குமதியாளர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர் இவ்விதிகளுக்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட விதிப்பனவுகளின் அறவீட்டைச் செலுத்துதல் வேண்டும்.

6. இறக்குமதியாளரொருவரின் விடயத்தில், ஆணையாளர் தலைமையதிபதி, இயைபான ஆவணங்களை இறுதியாக்குவதற்கு முன்னர் அத்தகைய நிபந்தனைகளுக்கமைய ஒட்டுத்துண்டுகளை வழங்கலாம்.

7. அறவிடப்பட்ட விதிப்பனவுகளின் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி, 5 ஆம் விதியின் (4) (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய விதிப்பனவுகளின் கொடுப்பனவு தொடர்பில் இறக்குமதியாளருக்கு அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளருக்கு அத்தகைய தொகையினவான ஒட்டுத்துண்டுகளை வழங்குதல் வேண்டும்.

8. (1) இறக்குமதியாளரொருவர், சுங்கக்கிடங்கிலுள்ள அல்லது மொத்த விற்பனை உரிமமளிக்கப்பட்ட வளவுகளிலுள்ள (FL 3) II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றில் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் பிணைப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(2) உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர், II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றில் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுவதற்கு, களஞ்சியப்படுத்துவதற்கு மற்றும் பிணைப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) இவ்விதியின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒட்டுத்துண்டின் செயற்படுத்துகைக்கு இலங்கை மதுவரித் திணைக்களம் பொறுப்பாதல் வேண்டும்.

9. (1) ஒட்டுத்துண்டு பின்வருமாறு இருந்தாலொழிய, விமான நிலையங்களில் தொழிற்படுகின்ற தீர்வையற்ற கடைகளுக்காக எந்தச் சுங்கங்கிடங்குகளிலிருந்து II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளெதுவும் வழங்கப் படுதலாகாதோ அந்தச் சுங்கக்கிடங்குகளில் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுவதற்கு இலங்கைச் சுங்கம் பொறுப்பாதல் வேண்டும் :-

(அ) இலங்கைச் சுங்கத்தின் மேற்பார்வையின் கீழ், II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளில் ஒட்டப்பட்டிருத்தல்; அத்துடன்

(ஆ) இலங்கைச் சுங்கத்தினால் செயற்படுத்தப்பட்டிருத்தல்.

(2) ஆயின் எவ்வாறாயினும், FL 3 உரிமத்தின் கீழ் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களை இறக்குமதி செய்யும் இறக்குமதியாளர்கள் இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் FL 3 மொத்த விற்பனை உரிமமளிக்கப்பட்ட வளவுகளில் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுதல் வேண்டும். அது, இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

10. அட்டவணை II இலுள்ள மதுவரியிடத்தகு பொருளொன்றில் ஒட்டப்பட்ட ஒட்டுத்துண்டானது, எவரேனும் ஆளினால் நுகரப்படுவதற்கு முன்னர் அவற்றின் மூல சிறப்புக்கூறுகளுக்கு ஏதேனும் மாற்றத்தை ஏற்படுத்தும் வெளிக்காட்டிவைத்தல், தலையிட்டுக்கெடுத்தல், மாற்றியமைத்தல், சேதப்படுத்தல், சீர்கெடுத்தல் அல்லது உரசித் தேய்தல் ஆகாது ;

ஆயின் எவ்வாறாயினும், இப்பந்தி பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது-

(i) நல்லெண்ணத்துடனான தனிப்பட்ட நுகர்வு ;

(ii) உரிமமளிக்கப்பட்ட வளவுகளில் நுகர்வு நோக்கத்துக்காக மதுபானத்தை விற்பனை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளவரான எவரேனும் உரிமம் வைத்திருப்பவர் மற்றும் 1979 ஆம் ஆண்டு திசெம்பர் 07 ஆந் திகதிய 66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 661 ஆம் இலக்க, அறிவித்தலுக்கிணங்க ஒரு வகையிலிருந்தான இரு சாராய போத்தல்களைத் திறப்பதற்கு உரிமம் வைத்துள்ள ஒருவர் அதிகாரமளிக்கப்பட்டுள்ளவிடத்தும்,

11. இறக்குமதியாளரொருவர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் :-

(அ) காலத்துக்குக்காலம் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக, II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றில் துலாம்பரமான இடத்தில் ஒட்டுத்துண்டை ஒட்டுதல் ;

(ஆ) ஒட்டுத்துண்டுகளைக் கொள்வனவு செய்தல், ஒட்டுத்துண்டுகளின் செலவைப் பொறுத்தல், ஒட்டுத்துண்டை ஒட்டும் உபாயங்களின் செலவைப் பொறுத்தல், ஒட்டுத்துண்டை ஒட்டும் தொழிற்பாடுகளின் செலவையும் வேறு எவையேனும் தொழிற்பாட்டுச் செலவுகளையும் பொறுத்தல்; இவற்றுள் அவற்றின் உபாயங்களின் சீராக்கங்கள்

அல்லது இசைவாக்கங்கள், ஒவ்வொரு தயாரிப்புக் கூடங்களிலும் புதிய அல்லது திரிபுபடுத்தப்பட்ட முறைமையை நிறுவுவதற்கும் ஒன்றிணைப்பதற்கும் அவசியமான அவற்றின் உபகரணங்களினதும் வளவுகளினதும் சீராக்கங்கள் அல்லது இசைவாக்கங்கள் என்பன உள்ளடங்கும் ;

(இ) ஒட்டுத்துண்டை ஒட்டும் தொழிற்பாடுகளுக்காக நடப்பிலுள்ள மற்றும் காப்பமைவு ஒட்டுத்துண்டை ஒட்டும் உபாயங்களையும் துணைப்பொருட்களையும் போதிய எண்ணிக்கையில் கொள்வனவு செய்தல் ;

(ஈ) அத்தகைய உபாயங்களையும் துணைப்பொருட்களையும் நல்லநிலையிற் பேணுதல் ;

(உ) ஒட்டுத்துண்டை ஒட்டும் தொழிற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒட்டுத்துண்டை ஒட்டும் உபாயங்கள் மற்றும் வேறு துணைப்பொருட்களில் ஏற்படும் எல்லா பொறிமுறைசார் மற்றும் தொழிற்பாடுசார் பழுதுகளையும் உடனடியாகக் கவனித்தல் ;

(ஊ) காப்பமைவு உபாயங்களையும் துணைப்பொருட்களையும் வழங்குதல் மற்றும் களஞ்சியப்படுத்துதல் ;

(எ) உபாயத்தின் தொழிற்பாட்டிலேற்படும் ஏதேனும் பழுதுபற்றி மதுவரித் திணைக்களத்துக்கு உடனடியாக அறிவித்தல் ;

(ஏ) இவ்விதிகளின் IV ஆம் மற்றும் V ஆம் அட்டவணைகளில் தரப்பட்ட படிவத்துக்கிணங்க பொருட்பதிவேடுகளையும் இடாப்புக்களையும் பேணுதல் ;

(ஐ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் வருடாந்தத் தயாரிப்பினதும் உற்பத்தியினதும் அல்லது இறக்குமதியின் அளவுகள் பற்றிய முற்கணிப்பொன்றைத் தயாரித்தல்.

12. மேலதிகமாக, உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் :-

(i) தயாரிப்புக்களின் இடையீடில்லாத வழங்குகையை இயலச் செய்விக்கின்ற தயாரிப்புக் கூடங்களையும் ஒட்டுத்துண்டை ஒட்டும் உபாயங்களையும் போதிய எண்ணிகையில் பேணுதல் ; அத்துடன்

(ii) பருவகால ஏற்றவிறக்கங்களைக் கவனத்துட்கொண்டு முற்கணிப்பிடப்பட்ட சராசரிக் கொள்ளளவின் அடிப்படையில் ஐந்து (05) நாட்களுக்கான தயாரிப்புக்குப் போதுமான ஒட்டுத்துண்டுகளின் இருப்பைப் பேணுதல்.

13. இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முன்னரான திகதியில் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களை இறக்குமதி செய்கின்ற அல்லது உற்பத்தி செய்கின்ற எவரேனும் இறக்குமதியாளர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர் இவ்விதிகள் நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து முறையே முப்பது (30) நாட்களையும் ஆறுபது (60) நாட்களையும் கொண்டவொரு காலப்பகுதியினுள் ஒட்டுத்துண்டை ஒட்டும் உபாயங்களையும் இவ்விதிகளுடன் இசைந்தொழுகும் வேறு துணைப்பொருட்களையும் பெற்றுக்கொள்ளல், நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்தல் வேண்டும்.

14. (1) இவ்விதிகளின் நோக்கத்துக்காக, நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் பின்வருவோரைக் கொண்ட குழுவொன்றை நியமித்தல் வேண்டும் :-

(அ) திறைசேரியின் பிரதிச் செயலாளர், அவர் குழுவின் தவிசாளராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) இலங்கை மதுவரித் திணைக்களத்தின் மதுவரி ஆணையாளர் தலைமையதிபதி ;

(இ) அரசிறைக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவர் ;

(ஈ) இலங்கைச் சுங்கத்தின் பணிப்பாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் நியமிக்கப்பட்ட அலுவலரொருவர்; அத்துடன்

(உ) இலங்கை மதுவரித் திணைக்கத்தின் பிரதி மதுவரி ஆணையாளர் (வழங்குகைச் சங்கிலி ஒழுங்குபடுத்துகை).

(2) குழுவின் உறுப்பினர்கள் ஓராண்டைக்கொண்ட காலப்பகுதியொன்றுக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், குழுவின் பதவிக்காலமானது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியொன்றுக்கு நீடிக்கப்படலாம்.

(3) மூன்று உறுப்பினர்கள் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண்ணாக அமைதல் வேண்டும்.

(4) குழுவானது அவசியமாகக்கூடியவாறு அடிக்கடியாக, ஆனால் ஒவ்வொரு மாதத்திலும் ஒருதடவைக்குக் குறையாது கூடுதல் வேண்டும்.

(5) குழுவானது கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை முறையினை ஒழுங்குப்படுத்தலாம் ; அத்துடன்

(6) இலங்கை மதுவரித் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதுசார்பில் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிகப்படக்கூடியவாறாக குழுவின் கூட்டத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

(7) குழுவின் உறுப்பினர்கள், குழுக்கூட்டங்களில் கலந்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய கண்டிப்பான அந்தரங்கத் தன்மையை எல்லா நேரங்களிலும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

15. பின்வருவன குழுவின் பணிகளாக இருத்தல் வேண்டும் :-

(அ) காலத்துக்குக்காலம் ஒட்டுத்துண்டுகளின் வடிவத்தையும் தன்மையையும் தீர்மானித்தல் ;

(ஆ) காலத்துக்குக்காலம் ஒட்டுத்துண்டுகளைக் கோரும், செய்முறைப்படுத்தும், கட்டளையிடும், அச்சிடும், களஞ்சியப்படுத்தும், வழங்கும் மற்றும் விநியோகிக்கும் முறைகளைத் தீர்மானித்தல் ;

(இ) காலத்துக்குக்காலம் இறக்குமதியாளர்களினாலும் உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களினாலும் பேணப்பட வேண்டிய பொருட் பதிவேடுகளினதும் இடாப்புக்களினதும் வடிவத்தைத் தீர்தமானித்தல் ;

(ஈ) காலத்துக்குக்காலம் தயாரிப்புச் சரிபார்த்தல் மற்றும் தடங்கண்காணித்தற் செயல்முறை என்பவற்றுக்கான முறைகள், நடவடிக்கை முறைகள் மற்றும் நடைமுறை ஒழுங்குகளைத் தீர்மானித்தல் ;

(உ) காலத்துக்குக்காலம் ஒட்டுத்துண்டுகளின் வெளிப்படை, உட்கிடை மற்றும் தடவியல் சிறப்புக்கூறுகள் பற்றி மெய்யென்று உறுதிப்படுத்தும் முறைகளைத் தீர்மானித்தல் ;

(ஊ) தேவையின் அடிப்படையில் ஒட்டுத்துண்டுகளின் கட்டளைக்கான அங்கீகாரத்தை அளித்தல் ;

(எ) ஒட்டுத்துண்டுகளின் பௌதிக மற்றும் தொழிற்பாட்டு செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தலும் எவையேனும் புதிய விதப்புரைகளை நடைமுறைப்படுத்தலும் ;

(ஏ) வடிவமைப்பு, அச்சிடுதல் மற்றும் ஒட்டுத்துண்டுகளின் தொடர்புடைய வேறு எல்லா செய்பணிகளினதும் செயல்முறைப்படுத்தல் பற்றிய கருமங்களையும் தரத்தையும் உறுதிப்படுத்துவதற்கான முறையான வழிகாட்டலையும் அறிவுறுத்தல்களையும் வழங்குதல் ;

(ஐ) இவ்விதிகளின் நோக்கத்துக்காக அவசியமாகக் கூடியவாறாகவுள்ள அல்லது குறித்தளிக்கப்படக் கூடியவாறாகவுள்ள அல்லது இடைநேர்விளைவாகக் கூடியவாறாகவுள்ள ஏதேனும் வேறு பணியை நிறைவேற்றுதல் ; அத்துடன்

(ஒ) நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு காலாண்டு அடிப்படையில் செயல்நிறைவேற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தல்.

16. உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரும் இறக்குமதியாளரும், விடயத்துக்கேற்ப, அவர்களின் உரிமமளிக்கப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வளவுகளில் அல்லது சுங்கக்கிடங்கில் அல்லது மொத்த விற்பனை உரிமமளிக்கப்பட்ட வளவுகளில் (FL 3) ஒட்டுத்துண்டுகளைக் களஞ்சியப்படுத்துவதற்கு பாதுகாப்பானதும் போதியளவிலானதுமான பிணைப்பு வசதியை வசதிப்படுத்துதல் வேண்டும்.

17. (1) ஆணையாளர் தலைமையதிபதி கட்டளைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவுக்கிணங்க பின்வரும் சந்தாப்பங்களில் ஒட்டுத்துண்டுகளை, உபகரணத்தை, உபாயங்களை, வாகனங்களை அல்லது பொருட்களைக் கைப்பற்றுதல் வேண்டும் :-

(அ) ஒட்டுத்துண்டுகள் போலியாகப் புனையப்பட்டுள்ளவிடத்து ;

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதிக்கு திருப்பிக்கொடுக்கப்பட வேண்டியவையாகவுள்ள ஒட்டுத்துண்டுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டிராதுள்ளவிடத்து ; அல்லது எவ்வாட்களுக்கு அவை வழங்கப்பட்டனவோ அவ்வாட்கள் தவிர்ந்த வேறு ஆட்களின் உடைமையில் அவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளவிடத்து ;

(இ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களைக் களஞ்சியப்படுத்துவதில், மறைத்து வைப்பதில் அல்லது இடம்பெயர்ப்பதில் பயன்படுத்தப்பட்ட வாகனம் இவ்விதிகளின் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திராதுள்ளவிடத்து ;

(ஈ) உபகரணம் அல்லது பொறித்தொகுதியானது போலியான ஒட்டுத்துண்டுகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்து ;

(உ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்கள் போலியான ஒட்டுத்துண்டுகளைக் கொண்டுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளுக்கு இசைந்தொழுகாத முறையில் ஒட்டப்பட்ட ஒட்டுத்துண்டுகளைக் கொண்டுள்ளவிடத்து அல்லது இவ்விதிகளுக்கிணங்கத் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஒட்டுத்துண்டுகளைக் கொண்டிராதுள்ளவிடத்து.

(2) ஏதேனும் பிணக்கு ஏற்படும் பட்சத்தில் ஆணையாளர் தலைமையதிபதி புலனாய்வு செய்வதற்கென குழுவொன்றை நியமிக்கலாம்.

18. பயன்படுத்தப்படாத ஒட்டுத்துண்டுகள் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் இறக்குமதியாளரொருவரினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பின்வரும் சந்தர்ப்பங்களில் திருப்பிக்கொடுக்கப்படலாம் :-

(அ) உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களை உற்பத்தி செய்வதனை நிறுத்திக்கொள்ளல் ;

(ஆ) ஒட்டுத்துண்டுத் தாள்களில் அல்லது சுருள்களில் குறைபாடுகள் காணப்படுதல் ; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியினால் ஒட்டுத்துண்டுகள் பயன்பாட்டுக்கு உகந்தவையல்ல என வெளிப்படுத்தப்பட்டிருத்தல்.

19. சேதமடைந்த ஒட்டுத்துண்டுகள் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவரினால் சரிபார்க்கப்படுவதற்காக இறக்குமதியாளரொருவரினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவரினால் பாதுகாப்பாக வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

20. இறக்குமதியாளரெவரும் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரெவரும் அத்தகைய இறக்குமதியாளரினால் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரினால் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ள ஒட்டுத்துண்டுகளை ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரமின்றி அதே உற்பத்தியாளருக்கு அல்லது இறக்குமதியாளருக்குச் சொந்தமான வேறு உற்பத்தி அல்லது இறக்குமதி அலகுக்குக் கைமாற்றுதலாகாது.

21. புதிய அல்லது திரிபுபடுத்தப்பட்ட ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமையின் நிறுவுகையொன்றின் விடயத்தில், ஆணையாளர் தலைமையதிபதி புதிய அல்லது திரிபுபடுத்தப்பட்ட ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமையின் நிறுவுகைக்கும் ஒன்றிணைப்புக்கும் முன்னர் ஆகக்குறைந்தது அறுபது (60) நாட்களில் II ஆம் அட்டவணையில் இறக்குமதியாளர்களுக்கும் உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கும் அதுபற்றி எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

22. இறக்குமதியாளரொருவர் அல்லது உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளரொருவர் :-

(அ) எவையேனும் தொழிற்படாத தயாரிப்புக் கூடங்கள் பற்றி, தயாரிப்புக் கூடங்களின் அத்தகைய தொழிற்படாமை நிகழ்ந்ததிலிருந்து இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும் ;

(ஆ) வளவுகளில் நிறுவப்பட்ட முறைமையின் பேணிக்காப்புக்கும் பாதுகாப்புக்கும் பொறுப்புடையவராதல் வேண்டும் ;

(இ) ஏதேனும் தொழிற்பாட்டுப் பழுது அல்லது பாதுகாப்புடன் தலையிடுதல் பற்றி, அத்தகைய நிகழ்வு நிகழ்ந்ததிலிருந்து இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் அறிக்கையிடுதல் வேண்டும் ;

(ஈ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் வணிகக் குறியீடுகளின் சுட்டுத்துண்டுகளுக்காக அல்லது பொதிகளுக்காக ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், இவ்விதியானது தீர்வையற்ற கடைகளில் விற்பனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களுக்கு ஏற்புடையதாதலாகாது.

(உ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் ஏலவேயுள்ள வணிகக் குறியீடுகளினதும், II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களின் நேரொத்த பொதிகளினதும் சுட்டுத்துண்டுகளினதும் வரைபடத்திலான ஏதேனும் மாற்றத்திற்கு முன்னர் ஆகக்குறைந்தது முப்பது நாட்களில் அதுபற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்துதல் வேண்டும் ;

(ஊ) பின்வரும் விடயங்களில் நிறுவுகை அல்லது அகற்றுகைக்கு ஆகக்குறைந்தது முப்பது நாட்களுக்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும் :-

(i) தொழிற்படாத தயாரிப்புக் கூடங்களின் ஏதேனும் மீள்செயற்படுத்துகை ;

(ii) தயாரிப்புக் கூடங்களின் செயல் முடக்கம் ;

(iii) பேணுகைப் பணிகளை நிறைவேற்றுதல் அல்லது தயாரிப்புக் கூடங்களின் இடமாற்றம் ; அத்துடன்

(iv) புதிய தயாரிப்புக் கூடங்களின் நிறுவுகை.

23. (1) ஆளெவரும்-

(அ) அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் மதுவரியிடத்தகு பொருளின் மீது ஒட்டப்பட்ட ஒட்டுத்துண்டுகளின் மேல் அச்சிடுதலோ அல்லது அவற்றை உருவழித்தலோ ஆகாது ;

(ஆ) இவ்விதிகளின் கீழ் ஒட்டுத்துண்டுகளை ஒட்டுதல் விலக்களிக்கப்பட்டுள்ளவிடத்து ஒழிய, எந்த மதுவரியிடத்தகு பொருட்களின் மீது ஒட்டுத்துண்டுகள் ஒட்டப்பட்டிருக்கவில்லையோ அந்த மதுவரியிடத்தகு பொருட்களை உடைமையில் வைத்திருத்தலாகாது ;

(இ) ஆணையாளர் தலைமையதிபதியின் அதிகாரமின்றி ஒட்டுத்துண்டைக் கொள்ளுவதற்கு எத்தனித்தல் அல்லது கொள்ளுதல் ;

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதியின் அதிகாரமின்றி ஒட்டுத்துண்டொன்றை அச்சிடுதல், ஆக்குதல் அல்லது ஏதேனும் வழியில் உருவாக்குதல் ஆகாது ;

(உ) ஆணையாளர் தலைமையதிபதியின் அதிகாரமின்றி அச்சிடப்பட்ட, ஆக்கப்பட்ட அல்லது ஏதேனும் வழியில் கொள்ளப்பட்ட ஏதேனும் ஒட்டுத்துண்டை உடைமையில் வைத்திருத்தலாகாது ;

(ஊ) இவ்விதிகளுக்கிணங்க ஒட்டுத்துண்டை ஒட்டாமல் II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல் அல்லது வியாபாரம் என்ற வகையாக வெளிக்காட்டி வைத்தல் ஆகாது ; அல்லது

(எ) போலியான ஒட்டுத்துண்டுகள் ஒட்டப்பட்ட II ஆம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட மதுவரியிடத்தகு பொருட்களை உடைமையில் வைத்திருத்தல், கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வைத்திருத்தல் அல்லது வியாபாரம் என்ற வகையாக வெளிக்காட்டி வைத்தல் ஆகாது.

24. நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ஒட்டுத்துண்டு மற்றும் ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமைபற்றிய செயல்முறைகளைக் கண்காணிப்பதற்கு கணக்காய்வாளர்கள் குழாமொன்றை நியமிக்கலாம்.

25. விடயத்திற்கேற்ப, கட்டளைச் சட்டத்தின் 27 ஆம், 47 ஆம், 48 ஆம், 50 ஆம் அல்லது 56 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் இவ்விதிகளின் ஏதேனும் மீறுகைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

26. இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய-

"மதுவரியிடத்தகு பொருள்" என்பது, (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தினால் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"பூல்புரூப் ஒட்டுத்துண்டு" என்பது, இவ்விதிகளுக்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒரு வகையான பாதுகாப்பு சிறப்புக்கூறு எனப் பொருள்படும் ;

"இறக்குமதியாளர்" என்பது, இவ்விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றை இறக்குமதி செய்வதற்கு (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றை வைத்திருப்பவர் எனப் பொருள்படும் ;

"தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (ICT) உட்கட்டமைப்பு" என்பது, சேவையகங்கள், பிரயோக மென்பொருள், தொழிற்படுத்தல் முறைமைகள், கம்பியுள்ள மற்றும் கம்பியில்லா வலையமைப்புக்கள், இலத்திரனியல் உபாயங்கள், புறவட்டங்கள், துணைப் பொருட்கள், கூறுகள், கருவிகள் மற்றும் வேறு தொடர்புடைய அசைவற்ற, அசைவுள்ள, செயல் முனைப்புள்ள, செயல் முனைப்பற்ற மற்றும் கைமுறைசார்ந்த கூறுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

"உரிமமளிக்கப்பட்ட உற்பத்தியாளர்" என்பது, இவ்விதிகளுக்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றை உற்பத்தி செய்வதற்கு (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றை வைத்திருப்பவர் எனப் பொருள்படும் ;

"ஒட்டுத்துண்டு" என்பது, பூல்புரூப் ஒட்டுத்துண்டு எனப் பொருள்படும் ;

"ஒட்டுத்துண்டு முகாமைத்துவ முறைமை" என்பது, பூல்புரூப் ஒட்டுத்துண்டுகளையும் பூல்புரூப் ஒட்டுத்துண்டுகளை முகாமை செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் (ICT) உட்கட்டமைப்பையும் உள்ளடக்குகின்றது ;

"வியாபாரி" என்பது, இவ்விதிகளுக்கிணங்க II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மதுவரியிடத்தகு பொருளொன்றை விற்பதற்கு, வைத்திருப்பதற்கு அல்லது விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருப்பதற்கு (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழான உரிமமொன்றை வைத்திருப்பவர் எனப் பொருள்படும்.

## அட்டவணை I

[விதி 2]

| பாதுகாப்பு சிறப்புக்கூறு | அளவுக் குறிப்பீடுகள் |
|---|---|
| ஒட்டுத்துண்டு | (1) நீளம் (100 மிமீ), அகலம் (20 மிமீ) மற்றும் நிறை (60 ஜீஎஸ்எம்)<br>நீளம் (80 மிமீ), அகலம் (16 மிமீ) மற்றும் நிறை (60 ஜீஎஸ்எம்)<br>நீளம் (50 மிமீ), அகலம் (10 மிமீ) மற்றும் நிறை (60 ஜீஎஸ்எம்)<br>விட்டம் (20 மிமீ) மற்றும் நிறை (60 ஜீஎஸ்எம்) இந்த சிறப்புக் கூறுகளின் மாற்றங்களிலான நெகிழ்வுத் தன்மையுடன்.<br><br>(2) மெய்யென்று உறுதிப்படுத்தல், தடங்கண்காணித்தல் தலையிட முடியாமை மற்றும் தானாக ஒட்டும், தானாக அழிந்துபோகும் மற்றும் மீளப் பயன்படுத்தப்பட முடியாத ஒட்டுத்துண்டு மற்றும் வேறு தொடர்புடைய பாதுகாப்புச் சிறப்புக்கூறுகள் என்பன உட்பட தடயவியல், உட்கிடை, வெளிப்படை மற்றும் பாதுகாப்பு சிறப்புக்கூறுகள்.<br><br>(3) முப்பரிமாண பாதுகாப்பு சிறப்புக்கூறுகள். |

## அட்டவணை II

[விதி 3]

| இல. | வகுதி |
|---|---|
| 01. | இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் |
| 02. | உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானம் |
| 03. | நாட்டு மதுபானம் |

## அட்டவணை III

[விதி 5 (4) (ஆ)]

| இல. | வகுதி | விதிப்பனவுகள் |
|---|---|---|
| 01. | ஒட்டுத்துண்டொன்றுக்கு | ரூபா 2.00 |

## அட்டவணை IV

[விதி 11 (ஏ)]

### ஒட்டுத்துண்டுகளின் பொருட்பதிவேடு

| திகதி | கையிருப்பிலுள்ள ஒட்டுத்துண்டுகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட ஒட்டுத்துண்டுகளின் எண்ணிக்கை | போத்தலில் அடைத்து வைக்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப் பட்ட மதுபானத்துக்காக வழங்கப்பட்ட ஒட்டுத் துண்டுகளின் எண்ணிக்கை | சேதமடைந்த ஒட்டுத்துண்டுகளின் எண்ணிக்கை | செயற்படுத்தப்பட்ட ஒட்டுத்துண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | | | |

## அட்டவணை V

[விதி 11 (ஏ)]

### சேதமடைந்த ஒட்டுத்துண்டுகளின் பொருட்பதிவேடு

| சேதமடைந்த ஒட்டுத் துண்டுகளின் எண்ணிக்கை | சேதமடைந்த ஒட்டுத் துண்டுகளின் தொடர் இலக்கங்கள் | அழித்துவிடுவதற்கான அங்கீகாரத்தை வழங்கும் கடிதத்தின் இலக்கமும் திகதியும் | சேதமடைந்த ஒட்டுத் துண்டுகளை அழிக்கும் திகதி | சேதமடைந்த ஒட்டுத் துண்டுகளை அழிப்பதில் ஈடுபட்ட அலுவலர்களின் பெயர்கள்/ பதவிப் பெயர்கள்/ கையொப்பங்கள் | உரிமம் பெற்றவரின் அல்லது முகவரின் கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

*07-503*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.